[1969 மார்ச் 11]

திரு. க. கோமதிசங்கர திட்சிதர் : தலைவர் அவர்களே, பக்கிங்காம் கால்வாயின் துர்நாற்றத்தைப் போக்கவும், கொசுக்களினால் ஏற்படும் கெடுதல்களைத் தடுக்கவும் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : துர்நாற்றத்தை அகற்றுவதும், கொசுக்களைப் போக்குவதும், நீண்ட காலத் திட்டம். அதைப் பற்றி முயற்சி எடுத்துத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரியலூர் வட்டம் மருதையாறு திட்டம்

*280 வினா.—**திரு ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் செயல்பட இருக்கும் மருதையாறு திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருதையாற்று நீரில் சோடியம் உப்பும் குளோரைட் உப்பும் அதிக அளவில் இருப்பதால் அந்த ஆற்றின் நீர் நஞ்சைப் பயிருக்கு ஏற்றதல்ல என உணரப்பட்டு இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த ஆற்றில் வரும் தண்ணீர் நஞ்சைப் பாசனத்திற்கு ஏற்றதல்ல என்றாலும், இந்த ஆற்றுக்குக் கரைகளே இல்லை. ஆகவே, கரைகளை விரிவுபடுத்தி, பலப்படுத்த வேண்டியது அவசியம். வெள்ளம் வரும் காலங்களில் பக்கத்துக் கிராமங்களை பாழ்படுத்துகிறது. அந்த மக்களைப் பாதுகாக்கும் பொருட்டாவது, இதன் கரைகளை மராமத்துச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி மருதையாறு திட்டம் பற்றியது. கனம் அங்கத்தினர் கரைகளைப் பற்றிக் கேட்கிறார்கள். தேவையானால், அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : நான் கேட்டது மருதையாற்றைப் பற்றித் தான்.

பதநீரிலிருந்து சர்க்கரை உற்பத்தி

*281 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் பதநீரிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிற சர்க்கரை ஆலைகள் எத்தனை உள்ளன ?

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் இயங்கி வருபவை எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) மூன்று.

(இ) இரண்டு.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, பதநீரிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால், அந்த ஆலைகளுக்கும் நூதனமான இயந்திரங்கள் இயங்கும் அளவிற்கு ஒரு நிபுணர் குழுவை நியமித்து நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்திய சர்க்காரிலிருந்து இதன் தொடர்பாக, இரண்டு அதிகாரிகள் பரிசீலனை செய்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். முடிவுகள் வந்த பிறகு அதைப் பற்றி ஆராயலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, பதநீரிலிருந்து சர்க்கரை எடுக்க என்று இந்த தொழிற்சாலைக்கு பணம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த சர்க்கரைக்கு அஸ்காவோடு போட்டியிடும் தகுதி இருக்கிறதா ? தகுதியில்லை என்றால், அதை அந்த அளவிற்கு கொண்டுவர அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை இரண்டிலும் ருசி இருக்கிறது. பதநீர்ச் சர்க்கரை சாப்பிடுவதால் "டைபிடீஸ்" போன்ற வியாதிகள் வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, கனம் உறுப்பினர் இதைப் பரீட்சித்துப் பார்க்குமாறு சிபாரிசு செய்கிறேன்.

திரு. ஆலடி அருணா : அவைத்தலைவர் அவர்களே, பதநீர் சர்க்கரையில் சுண்ணாம்பு வாடை அதிகமாக இருப்பதால், அவை வாங்குகிறவர்களுக்கு அது கவர்ச்சியாக இருக்கவில்லை. ஆகவே, சுண்ணாம்பு வாடை இல்லாத அளவிற்குச் செய்ய அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதிலே, நிபுணர்களைக் கொண்டு தான் இது செய்யப்படுகிறது. சுண்ணாம்பு வாடை அதிகமாக இருப்பதாகப் புகார்கள் வரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால், அதைக் குறைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் நாங்குநேரி பகுதிகளில் ஏராளமாக பனை மரங்கள் இருப்பதால், பனஞ்சாறு உற்பத்தி செய்கிறார்கள். ஏற்கனவே குலசேகரப்பட்டணத்தில் பாரி அண்ட் கம்பெனியார் வைத்து இருந்ததைப் போல, ஒரு சர்க்கரை ஆலை நிறுவ முன்வருமா இந்த அரசாங்கம் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை ஆலையை அரசு சார்பாக நிறுவ உத்தேசம் இல்லை. அதற்காகத்தான், பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், பல இடங்களில் அப்படி அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், மத்திய சர்க்காரிலிருந்து, இரண்டு அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மத்திய சர்க்காருக்கு கருத்துக்களை அனுப்புவார்கள். முடிவு வந்த பிறகு, அவசியமான பகுதிகளில் ஏற்படுத்தத் தயங்க மாட்டோம்.

***282 *Q.*—THIRU N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have proposed to issue licences for starting palm sugar factories in this State ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

முற்பகல் 9-30 **திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இனி யாவது அரசாங்கம் கூட்டுறவுத் துறையிலாவது இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள கேள்வியோடு தொடர்புள்ள கேள்வி இது. திரு. சித்தன் அவர்கள் ஏற்கெனவே கேட்டு நான் அதற்கு ஏற்கெனவே விளக்கங்களைக் கொடுத்திருக்கிறேன்.

Vigilance and Anti-corruption.

***266 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER AND THIRU P. SOUNDARAPANDIAN :** Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal to reorganise the Directorate of Vigilance and Anti-corruption ; and

(*b*) if so, the details thereof ?